©
GOVERNMENT OF TAMIL NADU
2015

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Re. 0.80 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

## EXTRAORDINARY PUBLISHED BY AUTHORITY

No. 66] CHENNAI, TUESDAY, MARCH 24, 2015
Panguni 10, Jaya, Thiruvalluvar Aandu–2046

## Part VI—Section 2

**Notifications or Orders of interest to a section of the public issued by Heads of Departments, etc.**

### NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

### COLLECTORS AND LOCAL AUTHORITIES.

**மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் ஊராட்சிகளின் ஆய்வாளர், வேலூர் மாவட்டம்.**

**வேலூர் மாவட்டம், அணைக்கட்டு ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட தேவிசெட்டிகுப்பம் ஊராட்சி மன்ற தலைவரை பதவியிலிருந்து நீக்கம் செய்தல் பற்றிய அறிவிக்கை.**

*(ந.க.எண்.1730/2013/அ3)*

**No. VI(2)/49(b-1)/2015.**

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 205, உட்பிரிவு 11–ல் ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவருக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படி, வேலூர் மாவட்டம், அணைக்கட்டு ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த தேவிசெட்டிகுப்பம் ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி வி. சின்னபொண்ணு, என்பவர் தனது அதிகாரத்தை தவறாக பயன்படுத்தி விதிமுறைகள் பின்பற்றாமல் ஊராட்சி நிதியில் செலவினம் மேற்கொண்டு ஊராட்சிக்கு நிதியிழப்பு ஏற்படுத்தி நிர்வாக சீர்கேடு செய்தது தொடர்பாகவும், தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 205–உட்பிரிவு (1)–ன் கீழ் பிறப்பிக்கப்பட்ட குற்றச்சாட்டுகள், அக்குற்றச்சாட்டுகளுக்கு ஊராட்சி மன்றத் தலைவர் அளித்த விளக்கங்கள் மற்றும் ஊராட்சி மன்றத்தின் கருத்தினை பரிசீலனை செய்து உளத்தேர்வின்படி தேவிசெட்டிகுப்பம் ஊராட்சி மன்றத்தலைவர் திருமதி வி. சின்னபொண்ணு என்பவரை தேவிசெட்டிகுப்பம் ஊராட்சி மன்றத்தலைவர் பதவியிலிருந்து நீக்கம் செய்து இதன் மூலம் அறிவிக்கை வெளியிடப்படுகிறது.

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 262 (1)–ன் கீழ் இந்த பதவி நீக்கம் குறித்த அறிவிப்பு **தமிழ்நாடு சிறப்பு அரசிதழில்** வெளியிடப்படும் நாள் முதல் அமுலுக்கு வரும்.

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 205 உட்பிரிவு 12–ன் கீழ் இந்த பதவி நீக்க அறிவிக்கை சம்மந்தமாக அரசிற்கு மேல்முறையீடு ஏதேனும் செய்ய விரும்பினால் ***தமிழ்நாடு அரசிதழில்*** பதவி நீக்கம் குறித்த அறிவிக்கை வெளியிடப்படும் நாளிலிருந்து 60 நாட்களுக்குள் மேல் முறையீடு செய்யலாம்.

வேலூர் மாவட்டம்,
**2015 மார்ச் 24.**

**இரா. நந்தகோபால்,**
*மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும்*
*ஊராட்சிகளின் ஆய்வாளர்.*

**வேலூர் மாவட்டம், சோலையார்பேட்டை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட வேட்டப்பட்டு ஊராட்சி மன்ற தலைவரை பதவியிலிருந்து நீக்கம் செய்தல் பற்றிய அறிவிக்கை.**

*(ந.க. எண் 398/2013/அ3)*

**No. VI(2)/49(b-2)/2015.**

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 205 உட்பிரிவு (11)—ல் ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவருக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படி வேலூர் மாவட்டம், சோலையார்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த வேட்டப்பட்டு ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி எம். சாந்தா, என்பவர் தனது அதிகாரத்தை தவறாக பயன்படுத்தி, விதிமுறைகள் பின்பற்றாமல் ஊராட்சி நிதியில் செலவினம் மேற்கொண்டு ஊராட்சிக்கு நிதி இழப்பு ஏற்படுத்தி நிர்வாக சீர்கேடு செய்தது தொடர்பாகவும், தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 205—உட்பிரிவு (1)—ன் கீழ் பிறப்பிக்கப்பட்ட குற்றச்சாட்டுகள், அக்குற்றசாட்டுகளுக்கு ஊராட்சி மன்றத் தலைவர் அளித்த விளக்கங்கள் மற்றும் ஊராட்சி மன்றத்தின் கருத்தினை பரிசீலனை செய்து உளத்தேர்வின்படி வேட்டப்பட்டு ஊராட்சி மன்றத்தலைவர் திருமதி எம். சாந்தா என்பவரை வேட்டப்பட்டு ஊராட்சி மன்றத்தலைவர் பதவியிலிருந்து நீக்கம் செய்து இதன் மூலம் அறிவிக்கை வெளியிடப்படுகிறது.

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 262 (1)—ன் கீழ் இந்த பதவி நீக்கம் குறித்த அறிவிப்பு **தமிழ்நாடு சிறப்பு அரசிதழில்** வெளியிடப்படும் நாள் முதல் அமுலுக்கு வரும்.

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 205 உட்பிரிவு 12—ன் கீழ் இந்த பதவி நீக்க அறிவிக்கை சம்மந்தமாக அரசிற்கு மேல்முறையீடு ஏதேனும் செய்ய விரும்பினால் ***தமிழ்நாடு அரசிதழில்*** பதவி நீக்கம் குறித்த அறிவிக்கை வெளியிடப்படும் நாளிலிருந்து 60 நாட்களுக்குள் மேல் முறையீடு செய்யலாம்.

வேலூர் மாவட்டம்,
2015 மார்ச் 24.

**இரா. நந்தகோபால்,**
*மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும்*
*ஊராட்சிகளின் ஆய்வாளர்.*

PRINTED AND PUBLISHED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, CHENNAI
ON BEHALF OF THE GOVERNMENT OF TAMIL NADU